பக்கங்கள் : நான்கு

உதயன்

விலை
ரூபா
10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 தை 11 வியாழக்கிழமை (25.01.2007)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 61

ஒருபுறம் போரை நடத்திக்கொண்டு அமைதி பற்றியும் பேசுகிறது அரசு!

உலக நாடுகளை ஏமாற்றும் செயல் என்கின்றனர் புலிகள்

கொழும்பு, ஜன.25

ஒருபக்கம் கிழக்கில் போரை நடத்திக் கொண்டு மறுபக்கம் அமைதி பற்றி அரசு பேசுகிறது. நிதி வழங்கும் உலக நாடுகளை ஏமாற்றும் முயற்சியே இது.

- இப்படிக் கூறியிருக்கிறார் விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன்.

சிங்கப்பூரில் இருந்து வெளியாகும் 'தமிழ்முரசு' பத்திரிகை இளந்திரையனின் இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறது.

ஒருபக்கம் கிழக்கில் போரை நடத்திக் கொண்டே மறுபக்கம் அமைதி பற்றி அரசாங்கம் பேசுகிறது. முன்பு ஜெனீவாவில் அமைதிப் பேச்சு நடந்தபோது, போர் நிறுத்த உடன்பாடு பற்றிப் பேசுவதற்கு நிதியுதவி வழங்கும் நாடுகளும் கண்காணிப்புக் குழுவினரும் வலியுறுத்திய வேளையில், நாங்கள் அது பற்றிப் பேசவரவில்லை என்று அரசாங்கமே நிராகரித்தது.

அப்படி இருக்கையில் இப்போது அமைதிப் பேச்சு என்று சொல்லும் அரசாங்கத்தை எப்படி நம்பமுடியும் என்றும் கேள்வி எழுப்பியுள்ளார் இளந்திரையன்.

அமைதி உடன்பாட்டைக் கையில் வைத்துக்கொண்டே, தாக்குதல்களை தொடர்ந்து நடத்துகிறது. அதேநேரத்தில் நிதியுதவி வழங்கும்உலக நாடுகளை ஏமாற்ற சிறிலங்கா அரசாங்கம் உதட்டளவில்

(04 ஆம் பக்கம் பார்க்க)

மன்னாரில் மூன்று தினங்களில் ஐவரைக் காணவில்லை என முறைப்பாடு

கொழும்பு,ஜன.25

கடந்த மூன்று தினங்களில் மன்னாரில் ஐந்து இளைஞர்கள் காணாமற்போனதாக மன்னார் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முருங்கனைச் சேர்ந்த செபமாலை சரண் ஜெயசீலன் (வயது 24), அந்தோனிப்பிள்ளை ஹரிதாஷ் (வயது 29) ஆகிய இருவரும் கடந்த 19ஆம் திகதியும் -

பேசாலையைச் சேர்ந்த கிட்டினன் ஆனந்தகுமார் (வயது 23), உப்புக்குளத்தைச் சேர்ந்த வசந்தகுமார் மயூரன் (வயது 14), சுனீஸ் (வயது 13) ஆகியோர் 22ஆம் திகதியும் - காணாமற் போயுள்ளதாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. (1-4)

சிறுவர்களைப் படைக்குச் சேர்ப்பதில் அரசுப் படைகள் நேரடியாக சம்பந்தம்

அமெரிக்காவில் செயற்படும் முக்கிய மனித உரிமைக் குழு அறிக்கை

கொழும்பு, ஜனவரி 25

சிறுவர்களைப் படைக்குச் சேர்க்கும் கருணா குழுவினரின் அடிப்படை மனித உரிமை மீறல் செயற்பாட்டுக்கு இலங்கை அரசுப் படைகளும் நேரடியாகவே உதவி வருகின்றன என அமெரிக்காவைத் தளமாகக்கொண்டு இயங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பான Human Rights Watch நிறுவனம் அறிவித்திருக்கின்றது.

யுத்தத்தில் சிறுவர்களின் பாதிப்புத் தொடர்பான ஐ.நாவின் ஆணையாளர் சார்பில் அவரின் விசேட பிரதிநிதி, இவ் விவகாரம் குறித்து சுமத்திய அதே குற்றச்சாட்டை, தற்போது அமெரிக்காவிலிருந்து இயங்கும் மனித உரிமைகள் கண்காணிப்புக் குழுவும் அங்கீகரிக்கும் வகையில் திரும்ப எடுத்துரைத்திருக்கின்றது.

கருணாகுழுவுடன் சேர்ந்து அரசுப்படைகள் இயங்குவதை அரசுத் தரப்பு உத்தியோகபூர்வமாக மறுத்து வருகின்ற போதிலும் இரு தரப்பினரதும் ஒத்துழைப்புடனேயே படைக்குச் சேர்ப்பதற்காக சிறுவர்கள் கடத்தப்படுவது நடந்தேறி வருவதாகக் கூறப்படுகின்றது.

''புலிகள் சிறுவர்களைத் தமது படைக்குத் திரட்டி வருகின்றனர் என நீண்ட காலம் புலிகளைக் குற்றம் சுமத்திவந்த அரசு, அதே குற்றத்துக்குத் தானும் இப்போது உடந்தையாகியிருக்கின்றது.'' - என்று மனித உரிமைகள் அமைப்பின் சிறார்கள் கண்காணிப்பை ஊக்குவிக்கும் செயற்பாட்டாளரான ஜோபெக்கர் தமது ஆகப் பிந்திய - சுமார் நூறு பக்கம் கொண்ட - அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

''குற்றத்தில் பங்கு: சிறுவர்களைக் கடத்திப் படைக்குச் சேர்க்கும் கருணா குழுவுக்கு அரசு உடந்தை'' என்ற தலைப்பிலேயே மேற்படி மனித உரிமைகள் அமைப்பின் இந்த அறிக்கை வெளியாகியுள்ளது.

கணக்கிலடங்கா இராணுவ, பொலிஸ் சோதனைச்சாவடிகள் மற்றும் பாதுகாப்புப் படைகளின் முகாம்களுடன் அமைந்துள்ள - அரசின் உறுதியான கட்டுப்பாட்டில் உள்ள - பிரதேசங்களிலேயே இந்தச் சிறுவர்கள் பலவந்தமாக கடத்தப்படுவது இடம்பெறுவதாக அந்த அறிக்கை கூறுகிறது.

(04 ஆம் பக்கம் பார்க்க)

இந்தியா, நேபாளத்துக்கு இன்று பயணமாகிறார் ரணில்

கொழும்பு, ஜன. 25

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேபாள அரசின் விசேட அழைப்பின் பேரில் இன்று நேபாளத்திற்கு விஜயம் செய்கின்றார். அங்கு நேபாள பிரதமர் உட்பட பல அரசியல் தலைவர்களைச் சந்தித்து உரையாடவுள்ளார். அங்கிருந்து புதுடில்லி செல்லும் ரணில் விக்கிரமசிங்க 29 மற்றும் 30 ஆகிய திகதிகளில் அங்கு இட்ம்

(04 ஆம் பக்கம் பார்க்க)

பூஸாவிலிருந்த 33 பேர் இன்று நீதிமன்றில் ஆஜர்

கொழும்பு, ஜன. 25

பூஸா முகாமில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களில் 33 பேர் இன்று காலை கொழும்பு மாவட்ட முதலாம் இலக்க நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, விடுதலை செய்யப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என புலனாய்வுப்பிரிவு சப் இன்ஸ்பெக்டர் எம்.அப்தின், கொழும்பு மாவட்ட மலையக மக்கள் முன்னணி நாடாளுமன்ற உறுப்பினரும் வாழ்க்கைத் தொழில், தொழில்நுட்ப பயிற்சி பிரதி அமைச்சருமான பெ.இராதாகிருஷ்ணனிடம் நேற்று மாலை தெரிவித்தார்.

(04 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் றோபேர்ட் ஒ.பிளேக் மற்றும் தூதரகத்தின் பொதுசனத் தொடர்பு அதிகாரி ரெறி வைற் ஆகியோர் நேற்று உதயனின் சகோதரப் பத்திரிகையான 'சுடர் ஒளிப்' பணிமனைக்கு விஜயம் செய்து நிர்வாக இயக்குநர் மற்றும் ஆசிரியர்களுடன் கலந்துரையாடினார். அப்போது எடுக்கப்பட்ட படம் இது.

கிழக்கு முஸ்லிம் கவுன்ஸில் பிரதிநிதிகள் கொழும்பில் கருணா குழுவுடன் பேச்சு!

கொழும்பு, ஜன.25

கிழக்கில் அண்மைக் காலமாக இடம்பெற்ற தமிழ் - முஸ்லிம்களுக்கு இடையிலான - அசம்பாவிதங்களை அடுத்து அங்கு நிரந்தர நல்லுறவைக் கட்டியெழுப்பும் நோக்கில் 52 நிறுவனங்களின் கூட்டமைப்பான முஸ்லிம் கவுன்ஸில் கடந்த திங்கட்கிழமை கருணா அணியினரைச் சந்தித்துப் பேசியுள்ளது.

இச்சந்திப்பு திங்கட்கிழமை கொழும்பில் உள்ள கருணா அணியினரின் அலுவலகத்தில் இடம்பெற்றது. இச்சந்திப்பின்போது தமிழ் - முஸ்லிம் உறவைக் கட்டியெழுப்பும் நோக்கில் இருதரப்பினராலும் எட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முஸ்லிம் கவுன்ஸிலின் சார்பில் அதன் தலைவர் என்.எம். அமீன், பொதுச் செயலாளர் எம்.டி.எம். ரிஷ்வி, அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. மாநாட்டுத் தலைவர் ஜப்ரி ஹனீபா, அகில இலங்கை ஜமாத்தே இஸ்லாமியின் பிரதிப் பொதுச் செயலாளர் டாக்டர் எம்.ரீ.எம். மஹ்ரூஸ் மற்றும் அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் முன்னணி

(04 ஆம் பக்கம் பார்க்க)

தொப்பிகல வரையிலான பகுதிகளை மீட்கும்வரை இராணுவ நடவடிக்கை

கிழக்குக் கட்டளைத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 25

கிழக்கு மாகாணத்தில் தொப்பிகல வரையிலான பகுதிகளைக் கைப்பற்றும் வரை இராணுவ நடவடிக்கை தொடரும் என்று கிழக்கு மாகாண இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பராக்கிரம பன்னிப்பிட்டிய தெரிவித்துள்ளார்.,

வாகரையில் வைத்து ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

கிழக்கு மாகாணத்தில் இதுவரை கைப்பற்றப்பட்ட பகுதிகளில் பாதுகாப்பைப் பலப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புலிகளால் புதைக்கப்பட்ட கண்ணி வெடிகளில் 20 சதவீதமானவற்றைப் படையினர் மீட்டுள்ளனர்.

மட்டக்களப்பு - திருகோணமலை

(04 ஆம் பக்கம் பார்க்க)

யாழ். பல்கலை. கல்விச் செயற்பாடுகளை பெப்ரவரி நடுப்பகுதியில் ஆரம்பிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.25

யாழ். பல்கலைக்கழகத்தை மீண்டும் கூடிய விரைவில் இயங்க வைப்பதற்கான ஏற்பாடுகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பல்கலைக்கழக வட்டாரங்கள் நேற்று உதயனுக்குத் தெரிவித்தன.

பெரும்பாலும் எதிர்வரும் பெப்ரவரி மாத நடுப்பகுதியில் பல்கலைக்கழகம் இயங்கக் கூடிய வாய்ப்புகள் உள்ளதாகத் தெரியவருகிறது.

'யாழ். பல்கலைக் கழகத்தை இம் மாதம் 22ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், வேண்டிய வசதிகளையும், ஏற்பாடுகளையும் செய்வதில் தாமதம் ஏற்பட்டதால், குறித்த திகதியில் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்படமாட்டாதென பதில் துணைவேந்தர் பேராசிரியர் இ.குமாரவடிவேல் அறிவித்திருந்தார்.

தற்போது வெளிமாவட்டங்களில் உள்ள பல்கலைக்கழக மாணவர்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டு அவர்களின் பயண ஏற்

(04 ஆம் பக்கம் பார்க்க)

G.A.Q. பேராதனை பல்கலைக்கழகம் (வெளிவாரி)

- ★ பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
- ★ பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
- ★ பதிவுகள் முடிவு திகதி: 28.02.2007
- ★ புதிய பிரிவுக்ளுக்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

குறிப்பு: 1St in Com, G.A.Q. யாழ். பல்கலைக்கழகம் (வெளிவாரி) புதிய பிரிவுகளுக்குரிய விரிவுரைகளும் ஆரம்பமாகி விட்டன.

நிர்வாகி:
S. அருள்நங்கை. (57447)

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் தைமாதம் 29ஆம் நாள்(29.01.2007) திங்கட்கிழமை காலை 10.30 முதல் 11.30 வரை இருக்கும் சுபவேளையில்,

திரு. திருமதி சிறில் யோகம்மா
றாஜபேட்

திரு. திருமதி திருஞானரத்தினம் செல்வராணி
றஜிதா

இருவருக்கும் இறை ஆசியுடன் மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருநிலைப்படுத்தல் எனும் அருட்சாதனம் நிறைவேற்ற பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணத்தில் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து இருவரையும் அன்புடன் ஆசித்து தொடர்ந்து நடைபெறும் உபசாரத்தில் பங்குகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திரு. திருமதி
சிறில் யோகம்மா,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

திரு. திருமதி
திருஞானரத்தினம் செல்வராணி,
அம்பலவாணர் வீதி,
(57461) உடுவில், சுன்னாகம்.

குளிரூட்டிய நவீன CAR வாடகைக்கு

- ★ திருமணம் (அலங்காரத்துடன்)
- ★ சுற்றுலா ★ விசேட வைபவங்கள்

போன்ற அனைத்து தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீன கார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக்கொள்ளலாம். (48465) (24

தொடர்பு: ரட்ணம்
சோமசுந்தரம் பாலர் பாடசாலை
22, சோமசுந்தரம் அவனியூ, சுண்டிக்குளி. யாழ்ப்பாணம்

T.P.: 0777-903090
0777 246117

7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

சின்னக்குட்டி குண்டுமணி

தோற்றம் : 15.04.1933
மறைவு : 27.01.2000
திதி: 25.01.2007

சில சில வருடங்கள் சென்றாலென்ன - உம்
பல பல நினைவுகள் என்றும் எம் நெஞ்சுடன்

'குண்டுமணி நிவாஸ்', கலைமகள் வீதி,
இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி. (57449) - குடும்பத்தினர்.

கண்ணீர் அஞ்சலி

யா/வட இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை செல்வி த.மேகலா அவர்களின் அன்புத் தாய்

திருமதி செல்லம் தங்கஜெயமணிராஜா

அவர்கள் 23.01.2007 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தமையயிட்டு ஆழ்ந்த கவலையடைவதோடு, அவரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், அலுவலக ஊழியர்கள், மாணவர்கள்
வட இந்து மகளிர் கல்லூரி.
(சி/51907)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையில் தொடர்ந்து 15 வருடங்களுக்கு மேலாக ஆசிரியையாக, பாட இணைப்பாளராக, பகுதித் தலைவராக, பாடசாலையின் க.பொ.த உயர்தர இணைப்பாளராகவும் பணியாற்றி, புவியியல் பாடத்தில் மாணவர்கள் சிறந்த தேர்ச்சியைப் பெறுவதற்கு சகல வழிகளிலும் கற்பித்தல் மூலம் வழிகாட்டியாக ஊக்கத்துடன் செயற்பட்டுவந்த,

செல்வி நாகலிங்கம் ஜெயராணி

(B.A. , Dip -In- Ed., M.Phil.[Geog])
அவர்கள்

01.01.2007 முதல் யா/சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தியாசாலைக்கு அதிபராகக் கடமையேற்றுள்ளதை மனமார வாழ்த்துவதுடன், சங்கைநகர் வேட்பாள வைரவர் துணை கொண்டு மேலும் பல உயர்வுகளைப் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர், நலன்புரிச் சங்கம்,
யா/ சிவப்பிரகாச ம.வி. சங்கானை.

பொருளியற் கல்லூரி

யாழ்ப்பாணம்-இணுவில் (இரு இடத்திலும்)

A/L Day பொருளியல்
PAPER CLASS
சந்தைப் பொருளாதாரம்
திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி
ஆரம்பம்: 25.01.2007 வியாழன்
By: P.S. குமார்
சனி, ஞாயிறு
A/L 2007, 2008, 2009
M.C. சுதாகரன் (57464)

மரண அறிவித்தல்

நகுலன் ஜெயக்குமார் ஜெயசிங்கம்

நல்லூரைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பாப்பிள்ளை ஜெயசிங்கம் செல்வரத்தினம் தம்பதியரின் புதல்வரான நகுலன் ஜெயக்குமார் (நகுலன்) 24.01.2007 அன்று பிரான்ஸில் காலமானார்.

அன்னார் மாலினியின் (பிரான்ஸ்) அன்புக் கணவரும் தர்ஷனா(லண்டன்), அருச்சுனா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருமதி றஞ்சி தருமபாலன் (ஜேர்மனி), திருமதி பாமினி கமலநாதன் (நியூசிலாந்து), நிமலன் ராஜ்குமார், அனுரா நந்தகுமார் (கனடா), சுதன் சாந்தகுமார்(ஆஸ்திரேலியா) ஆகியோரின் அருமைச் சகோதரருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தம்பிப்பிள்ளை ஜெயசிங்கம் (தந்தை)
இல.8A, சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை.
தொ.பே.: 00331-42355436 (57463)

விற்பனைக்கு

Photocopy Machine
விற்பனைக்கு உண்டு.
T.P. No.:
021 222 6666.

சாவகச்சேரியில் இரு இடங்களில் வாகனத் தரிப்பிடங்கள்

தென்மராட்சி,ஜன.25

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் மோட்டார் சைக்கிள்கள், மிதிவண்டிகள் நிறுத்துவது நேற்றுமுதல் தடை செய்யப்பட்டுள்ளது.

நகரப் பகுதிக்கு வருவோர் தமது வாகனங்களை பொது விளையாட்டு மைதானம் மற்றும் சாவகச்சேரி பஸ் நிலையம் ஆகியவற்றில் உள்ள வாகனத் தரிப்பிடங்களில் மட்டுமே விட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சாவகச்சேரியில் நடைபெற்ற கிளைமோர்த்தாக்குதலை அடுத்தே இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

41ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
15
o
10
o
1935

மறைவு
19
o
12
o
2006

மஞ்சும்பானைச் சேர்ந்த

கந்தையா சண்முகம்

நதியா-புதிய நதியா நகைமாட உரிமையாளர்களின் தந்தையாராகிய

அமரர் கந்தையா சண்முகம் அவர்களின் மரண செய்தி கேட்டு நேரில் வந்து ஆறுதல் அளித்தோர்க்கும், தொலைபேசி வாயிலாகவும், பத்திரிகை மற்றும் கண்ணீர்அஞ்சலி துண்டுப்பிரசுரங்கள் வாயிலாகவும், மலர் வளையம் வைத்தும், அனுதாபச் செய்திகளை தெரிவித்தோருக்கும், மேலும் வைத்தியசாலையில் உயிர் காக்க போராடிய வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்களுக்கும், மற்றும் மயானம்மட்டும் வருகைதந்த அன்பு உறவினர்கள், நண்பர்கள், வர்த்தக பிரமுகர்கள் அனைவருக்கும் மேலும் சகல வழிகளிலும் உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் நன்றிகளை தெரிவித்தோடு 19.12.2006 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அவர்களது அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (26.01.2007) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணியளவில் மண்கும்பான் மேற்கு வேலணைசாட்டி வெள்ளைக் கடற்கரையிலும், 28.01.2007 ஞாயிற்றுக்கிழமை அன்று வீட்டுக் கிருத்திய கிரியைகள் மு.ப. 11.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும். அன்றைய தினம் தாங்கள், தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அமரரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மரணச்சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் அழைப்பு கிடைக்க தவறியவர்களுக்கும் தற்போதையநாட்டுச்சூழ்நிலை காரணமாக இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

321B, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே.3479

- குடும்பத்தினர் -

திருமண வாழ்வின் முதலாண்டு நிறைவு

25.01.2007

கடந்த ஆண்டு இதே நாளில் லண்டனில் திருமண வாழ்வில் இணைந்துகொண்ட

அல்லிப்பளையைச் சேர்ந்த
சி.துமாபரன் (தரன்)
நுணாவில் மேற்கைச் சேர்ந்த
த.நிரோனி

தம்பதிகளது திருமண வாழ்வின் ஓராண்டு
நிறைவின் போது தம்பதியர்
சகல வளங்களும் பெற்று
பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்.

இல்லறமாம் ஓடத்தில் உலாவரும் உங்கள் நம்
நல்லறமாம் வாழ்வென்றும் நயந்து மணம் வீசிடவே
தூறலாய் தொடரும் அன்புப் பிரவாகமென்றும்
தொடரட்டும் பல்லாண்டு கரைபுரண்டு சிற்றாறாய்.

ச.தங்கேஸ்வரன்
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி

பெற்றோர், தங்கை ஜனனி
மற்றும் உறவினர்கள், அயலவர்கள்.

பதவி வெற்றிடம்

காப்புறுதித் துறையின் முன்னணி நிறுவனமான சிலிங்கோ ஆயுட் காப்புறுதி நிறுவனத்தின் சாவகச்சேரிக் கிளைக்கான பதவி வெற்றிடம்

பதவி:	**Sales Consultant** **Team leader** **Sales Executive**
தகைமை:	1) G.C.E O/L 2) G.C.E A/L

ஏற்கனவே காப்புறுதித் துறையில், சந்தைப்படுத்தல் துறையில் முன்னனுபவம் உள்ளவர்களும் அத்துடன், ஏனையவர்களும் நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படுகின்றனர்.

தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

நேர்முகத் தேர்வு : 27.01.2007 சனிக்கிழமை காலை 9 மணி

இடம்:- 560, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(செலான் வங்கி 2ஆம் மாடிக் கட்டடம்)

முகாமையாளர்,
தொலைபேசி இல. 0773726097.
(57456)

சுன்னாகம் பனை, தென்னைவள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)

பகிரங்க ஏல விற்பனை

மேற்படி சங்கத்திற்கு சொந்தமான பின்வரும் பொருள்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

1.ஒரு மினி உழவு இயந்திரம் 75 குவாட்டா கலப்பை பெட்டி உட்பட.
2.நீர் இறைக்கும் இயந்திரம் (என்வீல்ட்) இரண்டு.
3.மினி தண்ணீர் தாங்கி (பவுசர் 3010 போத்தல்) ஒன்று.

திகதி: 06.02.2007.
நேரம்: முற்பகல் 10 மணி.
இடம்: சுன்னாகம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், மின்சார நிலைய வீதி, சுன்னாகம்.

மேற்படி பொருள்களை சங்கத்தின் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். ஏலத்தில் பொருள்களைப் பெறுவதற்கு தகுதியானவர்கள் உரிய பணத்தைச் செலுத்தி உடன் பொருள்களை எடுத்துச்செல்ல வேண்டும்.

கூட்டுறவுச் சேவையிலுள்ள
பொதுமுகாமையாளர்.
(சி-51909)

நினைவு அஞ்சலி

60ஆம் நாள் 3ஆம் ஆண்டு

நல்லதம்பி வேலாயுதபிள்ளை		நல்லதம்பி சோமசுந்தரம்
12.12.1931	தோற்றம்	28.12.1933
27.11.2006	மறைவு	24.01.2004

எங்கள் அன்பு சித்தப்பாமார்
உங்களை என்றும் மறவோம்
உங்களின் ஆத்மாசாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திப்போம்.

அக்கா அகம்,
இணுவில் மேற்கு, இணுவில். (57453) குடும்பத்தினர்.

உதயன்
தொ.பே., தொ.ந.: 222 9933, 222 3837 - 222 9944

தெற்கில் இனக்கலவரங்களுக்கு தூபமிடுபவர் யார்?

கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களைச் சந்தித்த இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க, புதிய கருத்து ஒன்றை அவிழ்த்து விட்டிருக்கின்றார்.

"கிழக்கில் படுதோல்விகளைச் சந்தித்துள்ள புலிகள், தெற்கில் இனக்கலவரத்தைத் தூண்டும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். அதற்கமைவாகவே ஏற்கனவே நிட்டம்புவவிலும், ஹிக்கடுவையிலும் பஸ்ஸில் இரண்டு குண்டுகளை வெடிக்கச் செய்து மக்களைக் கொன்ற தோடு இனக்கலவரத்தையும் தூண்ட முயற்சி செய்தனர்." - என்று புதிய கண்டுபிடிப்பு ஒன்றை வெளியிட்டிருக்கின்றார் அவர்.

அரச பயங்கரவாதத்தை மூடி மறைத்து, புலிப் பயங்கரவாதத்தை பூதக் கண்ணாடி வைத்துக் காட்டும் தென்னிலங்கைத் தரப்பின் வழமையான பிரசாரத் தந்திரத்தில் இதுவும் ஒன்று என்றாலும், இந்தக் கருத்து விடயத்தில் சில விவரங்களைச் சீர்தூக்கிப் பார்ப்பது அவசியமாகின்றது.

இராணுவப்பேச்சாளர் குறிப்பிடும் இனக்கலவரம் என்பது, இந்த நாட்டுக்குப் புதிய விவகாரமல்ல. பௌத்த - சிங்களப் பேரினவாதத்தில் ஊறித் திளைத்த தென்னிலங்கையில், இனவெறி முறுக்கு பீறிட்டு வெளிப்பட்ட போதெல்லாம் அது சிறுபான்மையினர் மீதான இனக்கலவரங்களாகவே வெறியாட்டம் போட்டு ஓய்ந்திருக்கின்றது.

சிறு பான்மையினரின் வாழ்வைச் சிதைத்த இனக்கல வரங்கள், காலத்துக்குக் காலம் கட்டவிழ்த்து விடப்பட்டே வந்துள்ளன. 1956, 1958, 1961, 1974, 1977, 1979, 1981 என அட்சரம் பிசகாமல் - ஒழுங்காக - அடிக்கடி இனக்கலவரங்கள், தமிழ் பேசும் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட காலத்தில் எல்லாம் தமிழ் மக்கள் தங்களின் உரிமைக்கான போராட்டத்தை ஆயுத வழிக்கு முற்றாகத் திருப்பி யிருக்கவில்லை.

ஆனால், ஆயுதவழிக்கு அதனைத் திருப்பி, அந்தப் பாதையில் ஆயுதம் தரித்த - புரட்சிகர - தமிழ் இளைஞர்கள் பயணிக்கத் தொடங்கி விட்டனர் என்ற செய்தி 1983 ஜூலையில் யாழ். திருநெல்வேலியில், பலாலி வீதியில் 13 இராணுவத்தினர் உயிர்கள், நிலக்கண்ணி வெடியிலும், அதைத் தொடர்ந்து இடம்பெற்ற அதிரடித் தாக்குதலிலும் காவு கொள்ளப்பட்டு அதன் மூலம் வெளிப்படுத்தப்பட்ட போது, கடைசியாகப் பெரும் இனக்கலவரம் வெடித்தது.

அதற்குப் பின்னர் தமிழர் தாயகத்தில் அரச பயங்கரவாதம், தனது அராஜகத்தைத் தொடர்ந்து கட்டவிழ்த்து விடப்பட்டு வந்துள்ள போதிலும், பெரிய இனக்கலவரங்கள் தமிழர் மீது ஏவிவிடப்படவில்லை.

ஆக இரண்டு விடயங்கள் இங்கு கவனிக்கத் தக்கவை.

ஒன்று - 1981 வரை காலத்துக்குக் காலம் சிறுபான்மைத் தமிழர்கள் மீது தொடர்ந்து கட்டவிழ்த்து விடப்பட்ட மிக மோசமான பல்வேறு இனக்கலவரங்களுக்கும் காரணம் தமிழர்கள் தங்களின் உரிமைக்கான போராட்டத்தை ஆயுத வழிக்குத் திருப்பி, அதன் வெளிப்பாடாக அப்பாவிச் சிங்களப் பொதுமக்களைக் கொன்றொழித்தமை அல்ல.

தமிழர்கள் ஆயுதம் ஏந்தாமல் அஹிம்சை வழியில் - சாத்வீக நெறியில் - காந்தீயத்தின் அறவழி மார்க்கத்தில் - உரிமை கேட்டுப் போராடிய காலத்திலும் சிங்கள மேலாதிக்கம் சும்மாயிருக்கவில்லை. தமிழர்கள் மீது இனவெறிக் கலவரங்களைக் கட்டவிழ்த்து விட்டே வந்துள்ளது.

அடுத்து - தமிழர்களின் பாதுகாப்புக்கென இராணுவம் ஒன்று நிலைகொண்ட பின்னர் - 1983 இற்குப் பின்னர் - சிறுபான்மைத் தமிழர்களுக்கு எதிராக படையினரின் அரச பயங்கரவாதம் தொடர்ந்தும் கட்டவிழ்த்து விடப்பட்டதே தவிர, இனக்கலவரங்கள் ஏவிவிடப்படவேயில்லை. அதற்கான காரணம் எல்லோருக்கும் தெரிந்தவையே, புரிந்தவையே.

இராணுவப் பேச்சாளர் கதை கூறுவதுபோல பயணிகள் பஸ் மீதான குண்டுத் தாக்குதல்களைப் புலிகளே நடத்தினர் என்று வைத்துக்கொள்வோம்.

அப்பாவிப் பொதுமக்கள் மீதான அத்தாக்குதல்கள் கண்டிக்கப்படத் தக்கவை; ஏற்றுக்கொள்ள முடியாதவை; அங்கீகரிக்கப்பட முடியாதவை; கேவலமானவை; குரூரமும் கோழைத்தனமும் மிகுந்தவை.

ஆனால், இனக் கலவரத்தைத் தூண்டுவதற்காகவே அத்தகைய தாக்குதல்களைப் புலிகள் நடத்தினர் என அரசுத் தரப்பு புனைகதை சொல்வது நியாயப்படுத்தக் கூடிய ஒன்றா?

மன்னார், இலுப்பைக்கடவை - படகுத்துறையில் அப்பாவிப் பொதுமக்களின் மீன்பிடிக் குடியிருப்பு மீது கோரமாக விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தி, சுமார் இருபது தமிழர்களை சின்னாபின்னமாக்கிக் கொன்றொழித்த அரச பயங்கரவாதத்தை மூடி மறைக்கும் அரசுத் தரப்பினர், அந்தக் கொடூரத்துக்குப் பழிவாங்கும் நோக்கில் பயணிகள் பஸ்ஸில் குண்டுகளை வெடிக்க வைத்து அப்பாவிச் சிங்கள மக்களைப் புலிகள் உயிர்ப்பலி எடுத்திருக்கலாம் என்ற - நியாயமாக எழக்கூடிய - சந்தேகத்தையும் - கருத்தையும் - கூட மூடி மறைக்கின்றனர்.

இலுப்பைக்கடவை விமானக் குண்டுவீச்சுப் போன்ற அப்பாவித் தமிழர்களைக் கொன்றொழிக்கும் அரச அராஜகத்தை - பயங்கர வாதத்தை - மூடி மறைப்பதற்காகவே, பஸ் குண்டுத் தாக்குதல்களுக்கான நோக்கம், இனக் கலவரங்களைத் தூண்டி விடுவதே என்று முடிச்சுப் போடுகிறார் இராணுவப் பேச்சாளர்.

எனினும், ஒன்று மட்டும் நிச்சயம். 1983 ஜூலை இனக் கலவரமே தமிழர்களின் உரிமைக்கான ஆயுதப் போராட்டத்தை தீவிரப்படுத்தியது. அதுபோல இன்னொரு இனக் கலவரக் கொடூரத்தை அரசாங்கம் நாடுமானால் அது நாடு இரண்டாகப் பிளவுபடுவதற்கு வேண்டுமென்றே தூபம் இடுவதாகவே அமையும்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்குமாறு சர்வகட்சி குழுத் தலைவர் அரசுக்கு சிபாரிசு

கொழும்பு, ஜன.25

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காண்பதற்கு நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்க வேண்டுமெனத் தாம் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்கு சமர்ப்பிக்கவுள்ள ஆலோசனையில் தெரிவித்துள்ளார் என இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஆலோசனை சமர்ப்பிக்க நியமிக்கப்பட்ட சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைக்குப் பதிலாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமரை பொதுத் தேர்தலின்போது வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யும் தேர்தல் முறையொன்றையும் தாம் சிபாரிசு செய்துள்ளார் எனவும் அவர் தெரிவித்தார்.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவில் அங்கம் வகிக்கும் கட்சிகளில் சில, தமது ஆலோசனைகளுக்குத் திருத்தங்களைச் சமர்ப்பித்துள்ளன என்று தெரிவித்த அமைச்சர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனது ஆலோசனைகளைத் தெரிவிக்க இரண்டு வார கால அவகாசத்தைக் கோரியுள்ளதாகவும் தெரிவித்தார். தமது ஆலோசனைகளை ஆராய ஸ்ரீல.சு.கட்சி ஒரு குழுவை நியமித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை -

அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரணவின் ஆலோசனைகள் குறித்து ஐ.தே.கட்சி விரைவில் ஸ்ரீல.சு.கட்சியுடன் பேச்சு நடத்தவுள்ளதாக நேற்று தெரிவித்தது. முக்கிய கட்சிகள் இரண்டும் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் ஒத்த கருத்தினைக் கொண்டிருந்தால் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஆலோசனைகள் காத்திரமானவையாக அமையுமெனவும் அக்கட்சி தெரிவிக்கின்றது.

வடக்கிலும் தெற்கிலும் கடல் பாதுகாப்பு வலயத்தை உடனே நீக்கி மீனவர்கள் தொழில்புரிய உதவுங்கள்!

இன்றேல் எதிர்ப்புப் போராட்டத்தில் குதிப்போம் என்கிறது மீனவர் சேவைகள் சங்கம்

கொழும்பு,ஜன.25

வடக்கிலும், தெற்கிலும் அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கடல் பாதுகாப்பு வலயத்தை உடனடியாக நீக்கி மீனவர்களைத் தொழிலுக்குச் செல்ல அனுமதிக்குமாறு மீனவர்கள், ஜனாதிபதிக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். தவறும் பட்சத்தில் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுவது பற்றியும் ஆலோசித்து வருகின்றனர்.

இது தொடர்பாக நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அகில இலங்கை மீனவர் சேவைகள் சங்கத்தின் தலைவர் என். அருண ரொசாந்த பெர்னாண்டோ கூறுகையில்,

"பாதுகாப்புப் பிரச்சினையைக் காரணம் காட்டி அரசு தெற்கிலும், வடக்கிலும் கடல் பாதுகாப்பு வலயத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது. பல மாதங்களுக்கு முன் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்த விடயத்தால் ஆயிரக்கணக்கான மீனவத் தொழிலாளர்கள் தமது தொழில்களை முற்றாக இழந்துள்ளனர்.

இந்த மீனவர்களின் தொழில் பாதிக்காதவாறு அவர்களுக்கு மாற்று ஏற்பாடுகளைச் செய்து கொடுத்துவிட்டு இந்தப் பாதுகாப்பு வலயத்தை அரசு நடைமுறைப்படுத்தியிருக்க வேண்டும். ஆனால், அப்படிச் செய்யாது தான்தோன்றித்தனமாக அரசு செயற்படுகிறது.

நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்த இவ்வாறான நடைமுறைகள் ஒருபோதும் சரிவராது. மக்களைப் பட்டினியில் போட்டுக் கொன்றுவிட்டு நாட்டை மாத்திரம் பாதுகாத்து என்ன செய்ய முடியும்?

இந்தக் கடல் பாதுகாப்பு வலயத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேறு தொழில் செய்யக் கூடிய வாய்ப்புகள் எதுவும் கிடையாது.

இந்த மக்களின் தொழிலைப் பறித்தெடுத்த அரசு இவர்களுக்கு நிவாரணமாவது வழங்க முன்வரவில்லை. மீனவர்கள், மீனவத் தொழில் மூலம் அன்றாடம் உழைத்து வாழ்க்கை நடத்துபவர்கள்.

அவர்களின் ஒரு நாள் தொழில் பாதிக்கப்பட்டாலும் அந்த நாளில் அவர்கள் பட்டினியில் வாட வேண்டிவரும். இந்த நிலையில் மாதக்கணக்கில் இவர்கள் தொழிலை இழந்தால் இவர்களின் நிலை என்னவென்பதை ஜனாதிபதி சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஜனாதிபதி உடனடியாக இந்தப் பாதுகாப்பு வலயத்தை நீக்கி இம்மீனவர்களைத் தொழிலுக்குச் செல்ல அனுமதிக்க வேண்டும். இல்லையேல் இவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். இல்லா விட்டால் நாம் எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட வேண்டி வரும்." - என்றார்.

(ஐ)

குடாநாட்டில் உயிர் அச்சுறுத்தல் காரணமாக இதுவரை 41பேர் ஆணைக்குழுவில் சரண்

யாழ்ப்பாணம், ஜன.25

தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து இதுவரை மொத்தம் 41பேர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் சரணடைந்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் பாதுகாப்பாக யாழ். சிறைச்சாலையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகம் மேற்கொண்டிருந்தது.

இரவு மற்றும் பகல் வேளைகளில் தமது வீடுகளுக்கு திடீரென நுழைந்த இனந்தெரியா ஆயுததாரிகள் தமது உயிருக்கு அச்சுறுத்தல் விடுத்ததாகத் தெரிவித்து இந்த 41 பேரும் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சரணடைந்துள்ளனர்.

இவர்களில் சிலர் தமது குடும்பத்துடன் சரணடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-8)

மட்டுவிலில் நேற்று கிளைமோர்த் தாக்குதல்

தென்மராட்சி,ஜன.25

மட்டுவில் வடக்கு முத்துமாரி அம்மன் ஆலயத்திற்கு அண்மையில் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் கிளைமோர் தாக்குதல் ஒன்று இடம்பெற்றுள்ளது. சேத விவரங்கள் எவையும் தெரியவரவில்லை. (1-203)

நாளை

தை - 12
வெள்ளிக்கிழமை
26.01.2007
திதி: அட்டமி
முன்னிரவு : 06.40
நட்சத்திரம் : அச்சுவினி
முற்பகல்: 10.28 வரை
சுபநேரம் : 06.36-08.06
ராகுகாலம் : 11.06-12.36

முக்கிய மருந்துகளை தருவிக்கும் பணியை சுகாதாரத் திணைக்களம் நிறுத்துகின்றது

யாழ்ப்பாணம்,ஜன.25

நோயாளர்களுக்குத் தேவையான முக்கிய மருந்து வகைகளைக் கொழும்பில் இருந்து பெற்று வழங்கும் சேவையை சுகாதாரத் திணைக்களம் நிறுத்திக் கொள்ளவுள்ளது.

கடந்த டிசெம்பர் மாதத்தில் பதிவு செய்தவர்களுக்குரிய மருந்துகள் வந்து சேர்ந்துள்ளன.

உரியவர்கள் அவற்றை இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறும் பிரதி மாகாணப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

அத்தோடு, கொழும்பில் இருந்து மருந்துகளைப் பெற்றுக் கொள்வதற்கான பதிவுகள் எதுவும் இனிமேல் திணைக்களத்தினால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்றும் பதில் பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் க.தா. சிவபாதம் தெரிவித்தார்.

இதேவேளை-

இனிமேல் யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமே மருந்துகளை விநியோகிக்க ஏற்பாடாகி உள்ளதாகவும் அறியப்படுகின்றது. (அ)

இடைநிலை மருத்துவர் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன.25

குடாநாட்டில் இடைநிலை மருத்துவர்களை (PSM) தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9மணிக்கு யாழ்.வைத்தியசாலையில் இடம்பெறவுள்ளது.

இந்நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவோர் கல்விச் சான்றிதழ், அடையாள அட்டை, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கிராமசேவையாளர் வதிவிடச் சான்றிதழ் என்பனவற்றை இணைப்புக்களுடன் வைத்திய சாலை பணிப்பாளர் காரியாலயத்திற்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ள 29பேரின் விவரம் வருமாறு:-

எம். ஜெயந்தன் - உடுப்பிட்டி, எஸ். வித்தியா - மந்துவில் மேற்கு, எஸ்.கல்யாணி - சுழிபுரம், எஸ். பிரேமி - நல்லூர், எ.எ.நவீன் - யாழ்ப்பாணம், கே.கிருபாலினி - பொலிகண்டி கிழக்கு, என்.குகராஜன் - தங்கோடை, எஸ்.ராஜினி - நல்லூர் வடக்கு, எஸ்.எஸ்.சோபினி - கரவெட்டி, எஸ். சாரங்கன் இடைக்காடு, எஸ்.பிரசன்னா - ஆனைக்கோட்டை, எ.சுபாகரன் - துன்னாலை, எஸ்.நிர்மலன் - தலையாழி, ரி.கார்த்தீபன் - கோண்டாவில் வடக்கு, ரி.கதிர்காமத்தம்பி - துர்க்காபுரம், எஸ்.சுதர்சன் - அராலி தெற்கு, எஸ்.சதீசன் - சரசாலை வடக்கு, வி.கதிர்ச்செல்வன் - கெற்பலி, எஸ்.கணேசராஜ் - உடுவில் கிழக்கு, பி.பிரதீபன் - சுழிபுரம் மத்தி, எஸ்.கோகிலா - அல்வாய் கிழக்கு, பி.சிவகௌரி 15, ஓட்டுமடம் றோட், யு.திலீபன் - சங்கானை, கே.ஜெயராஜா - ஓட்டுமடம், எஸ்.ஹரிசங்கர் - திருகோணமலை, ஜி.பிரகலாதன் - பருத்தித்துறை, மெடில்டா - கரம்பொன் கிழக்கு, ரி.நிர்மலா - கொக்குவில் மேற்கு, லோஜிதன் - மீசாலை மேற்கு. (அ-1)

குடாநாட்டின் குட்டிச் செய்திகள் - யாழ்ப்பாணம்

மூவரைக் காணவில்லை

மூன்று பேரைக் காணவில்லை என மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கைதடி மத்தியைச் சேர்ந்த ஏ.ஜெயரூபன் (வயது 23) என்பவரை கடந்த 20ஆம் திகதி தொடக்கம் காணவில்லை என்று அவரது பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கடைக்குச் சென்ற இவர் வீடு திரும்பவில்லை என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணம், கில்னர் வீதியைச் சேர்ந்த கொ.நாகராஜ் (வயது - 37) என்பவரைக் கடந்த 21ஆம் திகதி முதல் காணவில்லை என அவரது தாயார் முறைப்பாடு செய்துள்ளார். அத்துடன் யாழ்ப்பாணம், பெருமாள் கோயிலடியைச் சேர்ந்த முருகதாசன் பிறேம் சுந்தரை (வயது-29) கடந்த 20ஆம் திகதி முதல் காணவில்லை என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. வீட்டில் இருந்து வெளியே புறப்பட்டுச் சென்ற இவர் பின்னர் வீடு திரும்பவில்லை என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (அ-8)

3ஆவது நாளாகவும் பகிஷ்கரிப்பு

வடமராட்சிப் பகுதிப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் நேற்று மூன்றாவது நாளாகக் கல்விச் செயற்பாடுகளைப் புறக்கணித்தனர்.

இதேவேளை, வேலாயுதம் ம.வித்தியாலயத்திற்கு நேற்றுச் சென்ற படையினர் பாடசாலை அதிபரை விசாரணை செய்ததாகவும் கூறப்பட்டுள்ளது.(203-115)

சாவகச்சேரி இளைஞர் ஒருவர் கைது

சாவகச்சேரியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் படையினரால் கைதுசெய்யப்பட்டதாக, அவரது பெற்றோர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

சங்கத்தானை, சாவகச்சேரியைச் சேர்ந்த நடேசலிங்கம் ராஜ்குமார் (வயது 21) என்ற இளைஞனே கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கெருடாவில் படைமுகாமில் வைத்தே இவர் கைதுசெய்யப்பட்டதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டது. (அ-8)

உள்ளூராட்சி ஓய்வூதியர்களுக்கு

உள்ளூராட்சி ஓய்வூதியர்களுக்கு ஜூலை மாதத் திகதியிட்டு அனுப்பப்பட்ட வவுச்சர்கள் டிசெம்பர் மாதத்துக்கு உரியனவே என்று இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

டிசெம்பர் மாதத்துக்குரிய வவுச்சர்களில் தவறுதலாக ஜூலை மாதத்துக்குரியவை எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

வடமாகாண உள்ளூராட்சி ஓய்வூதியர்களின் சங்கங்களின் சமாசம் இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டது.

அதனைத் தொடர்ந்து ஏற்கனவே மாதம் தவறாகக் குறிப்பிடப்பட்ட வவுச்சர்களுக்குக் கொடுப்பனவு வழங்குமாறு வங்கிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ-1)

தவறவிடப்பட்ட பணம் உரியவரிடம் கையளிப்பு

யாழ். கச்சேரிக்கும் பஸ் நிலையத்துக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்ஸில் பயணி ஒருவரால் தவறவிடப்பட்ட பெருந்தொகைப் பணம் உரிமையாளரிடம் கையளிக்கப்பட்டது. யாழ். மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்களின் தலைமையக வட்டாரங்கள் இத் தகவலைத் தெரிவித்தன.

பெண் பயணி ஒருவரால் தவறவிடப்பட்ட 2 லட்சம் ரூபா பணம், அந்த வாகனத்தின் உரிமையாளரான எஸ்.சேகரன் என்பவரால் சம்பந்தப்பட்டவரிடம் கையளிக்கப்பட்டது. (அ-1)

ஒருபுறம் போரை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கருத்துகளைச் சொல்லி வருகிறது எனவும் அவர் குற்றஞ் சாட்டினார்.

இதற்கும் மேலாக பேச்சுக்கு வரவேண்டும் என்று அல்லது அடி வாங்க வேண்டும் என்று கூறுவதற்கு ஹெகெலிய ரம்புக் வெலவுக்கு தகுதி கிடையாது - என்று அவர் தெரிவித்தார்.

அண்மைய காலத்தில் இராணுவத் தாக்குதல்களை எதிர்த்து எதிர்த்தாக்குதலை விடுதலைப் புலிகள் நடத்தாததாலும் எதிர்ப்புக் காட்டமல் அவர்கள் பின்வாங்கி வருவதாலும் முகாம்களை வேறு இடத்தில் மாற்றி அமைக்கக்கூடும் என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக அவதானிகள் கூறுவது பற்றி 'தமிழ்முரசு' கேட்டபோது ஸ்ரீலங்கா அரசாங்கம் நாட்டின் கிழக்கே மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கைகளின் விளைவுகளைப் பொறுத்திருந்து பாருங்கள் என்றார் விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இளந்திரையன்.

அத்துடன் கிழக்கின் 95% நிலப்பகுதியை இராணுவம் கைப்பற்றியிருப்பதாக அரசாங்கம் கூறுவதில் உண்மையில்லை. அங்கு மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் இருந்துதான் நாங்கள் விலகியிருக்கிறோம். விடுதலைப் புலிகளின் கட்டளைப் பணியகமும் போராளிகளும் இன்னமும் கிழக்கில் செயற்படுகின்றனர். கிழக்கில் ஏராளமான நிலப்பகுதியும் மக்கள் வாழிடங்களும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

85% நிலம் புலிகளின் வசம்

மட்டக்களப்பு வாவியின் மேற்குப் பகுதியில் வாகரையை விட பல மடங்கு பரந்த நிலப்பகுதி புலிகள் வசமுள்ளது. பல மடங்கு மக்களும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ளனர். ஏறக்குறைய 85% நிலம் விடுதலைப் புலிகள் வசம் உள்ளது. இதில் 95% எங்கிருந்து வந்தது என்று தெரியவில்லை - என்றார் இளந்திரையன்.

இதற்கிடையே யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இரண்டு குண்டுவெடிப்பு சம்பவங்களில் அரச படையினர் உட்பட நால்வர் கொல்லப்பட்டுள்ள சம்பவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் சம்பந்தமில்லை என்று கூறிய அவர், இத்தகைய தாக்குதல்களை விடுதலைப் புலிகள் நடத்துவதில்லை - என்றார்.

எங்கள் நிலைப்பாட்டை அனைத்துலக அரங்கில் வந்து சொல்ல எப்போதும் தயாராகத்தான் இருக்கிறோம். அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுக்கள் எங்கள்மீது இருக்கும் தடையை நீக்கும் பட்சத்தில் நாங்கள்அவர்களைத் தாராளமாகச் சந்தித்துப் பேசலாம் எனவும் குறிப்பிட்டார். (ஐ)

சிறுவர்களைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசின் இணக்கமும், மறைமுகமான ஆதரவும் இல்லாமல் எந்த ஆயுதக்குழுவினாலும் இவ்வாறு பெரிய அளவில் ஆள்கடத்தல்களைச் செய்யவோ, முகாம்களை அமைத்து கடத்தப்பட்டோருக்கு யுத்த ஆயுதப் பயிற்சிகளைக் கொடுக்கவோ முடியாது என்று இந்த அறிக்கை தெரிவிக் கிறது.

ஆனால், அரசு கருணாகுழுவுடனான தொடர்பை மறுக்கிறது. இவ்விடயத்தில் ஐ.நா. மற்றும் உதவி வழங்கும் அமைப்புகளின் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ள போதிலும் அவற்றைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு போதிய சாட்சியங்கள் இல்லையென அரசு தெரிவிக்கிறது. "இந்த விடயத்தில் எதையும் மூடி மறைக்க அரசு விரும்பவில்லை. அவ்வாறு கடத்திப் பலவந்தமாக ஆட்சேர்க்கின்ற போக்கு இருந்தால் - அதில் அரச பாதுகாப்புபடைகளின் ஏதேனும் பிரிவுகள் சம்பந்தப்பட்டிருந்தால் - அரசு அதுபற்றி முழு விசாரணைகளை நடத்தும்" - என்று பாதுகாப்புத் துறை பேச்சாளர் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்திருக்கிறார்.

"இதுவரை எந்த சான்றாதாரங்களும் கிடைக்கவில்லை. ஆனால், ஐ.நா. மற் றும் மனிதஉரிமை அமைப்புகள் திரும்பத் திரும்ப இதனைக் கூறுவதால் இந்த விடயத்தை நாங்கள் ஆழ்ந்த கவனத்தில் எடுத்திருக்கிறோம். அரசபடைகளுக்கு ஏதேனும் தொடர்பு இருக்கிறதா? என்பதைக் கண்டறிய எங்களால் இயன்ற அனைத்தையும் செய்வோம்." - என்றும் அவர் கூறினார்.

கடந்த ஆண்டு இறுதிவரை வயது குறைந்த 1,685 பேரை புலிகளும், 165 பேரை கருணாக்குழுவினரும் படைக்கு திரட்டியமை தொடர்பான விவரம் நிலுவையில் உள்ளது என ஐ.நா. கூறியுள்ளது. ஆனால், இந்த எண்ணிக்கை இதிலும் அதிகம் என Human Rights Watch அமைப்பு தெரிவிக்கிறது. (உ)

மரண அறிவித்தல்

திருமதி தவராசா பூபதி

ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி, கற்குளி ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தவராசா பூபதி நேற்று முன்தினம் அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தன் - கண்மணி தம்பதியரின் மகளும் வேலன் தவராசாவின் (சுற்றயல் கூறு, கோப்பாய்) மனைவியும் மாலினி, பகீரதன் (ஆசிரியர்), துஷாந், தயாளினி, ஜவானி (மாணவிகள், சாவகச்சேரி மகளிர் கல்லூரி), மனோஜினி, நிரோஜன் (மாணவர்கள், டிறிபேர்க் கல்லூரி) ஆகியோரின் தாயும் இராமேஸ்வரனின் (வரதன்) மாமியும் நவீனா, சேதுகரன், டேவினா, டிவோகரன் ஆகியோரின் பாட்டியும் மலர், ஏகாம்பரம், தவக்குமார், ரதி ஆகியோரின் பாசமிகு அக்காவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2007) மு.ப.10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கற்குளி ஒழுங்கை,
சாவகச்சேரி.

தகவல்:
வே.தவராசா (கணவர்).

ஜோன் அல்பேட் (வேவிராசா)

இல.10, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட ஜோன் அல்பேட் (வேவிராசா) 24.01.2007 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோன் - மேரிப்பிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற பிரகாசம்-அன்னம்மா தம்பதியரின் மருமகனும் கமலாவின் கணவரும் காலஞ்சென்ற அருளம்மா, மணி, வேவி, ரூபி, காலஞ்சென்ற இராசதுரை, தங்கராசா ஆகியோரின் சகோதரனும், ஞானறஞ்சிதம், நேசமலர், காலஞ்சென்றவர்களான அரியமலர், செபரட்ணம், நவரெட்ணம், ராணி, காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை, இரத்தினம்மா, மிக்கேல், வேதநாயகம், யோகலிங்கம் - சிவபாக்கியம், யோகராணி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25.01.2007) வியாழக்கிழமை பி.ப.2 மணிக்கு புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கோப்பாய் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

தகவல்:
ஜோன் தர்மராஜா, (கட்ட ஒப்பந்தகாரர்),
ச.சூசைமுத்து.

விலைவாசியைக் கண்டித்து பதுளையில் ஆர்ப்பாட்டம்

தாலி, ஜன. 25

நாட்டில் விலைவாசி உயர்வடைவதைக் கண்டித்து பதுளையில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டிருக்கிறது.

மாலை 4 மணியளவில் பதுளை பிரதான பஸ்தரிப்பு நிலையத்துக்கு முன்பாக ஒன்று கூடிய சுமார் 500 வரையான மக்கள் அரசுக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ். பல்கலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடுகளுக்கென உரியதரப்புகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களைப் பல்கலைக்கழகச் சுற்றாடலில் விடுதிகளில் தங்க வைப்பதற்கென தனியார் கட்டடங்களைப் பெறும் முயற்சிகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பல்கலைக்கழக வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்ததும் எதிர்வரும் பெப்ரவரி மாத நடுப்பகுதியில் பல்கலைக்கழகத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கான வாய்ப்புகள் உள்ள தாக அவை தெரிவித்தன. (அ-8)

இந்தியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறும் காங்கிரஸ் கட்சியின் சர்வதேச மாநாட்டில் கலந்துகொள்வார்.

அங்கு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி ஆகியோரைச் சந்தித்து இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமைபற்றி விளக்குவார் எனக் கூறப்படுகிறது.

இந்தச் சுற்றுப் பயணங்களை முடித்துக் கொண்டு அடுத்தமாதம் இரண்டாம் திகதி ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்புவார் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. (ஐ)

பூஸாவிலிருந்த.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு சுகததாச ஸ்போட்ஸ் ஹோட்டல் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கைதானவர்களின் உறவினர்களுடனான சந்திப்பின்போதே மேற்படி விபரம் தெரிவிக்கப்பட்டு 34 பேரின் பெயர்களும் அறிவிக்கப்பட்டது.

மிகுதியுள்ள அனைவரது பூர்வாங்க விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுவதாகவும், அவர்கள் அனைவரும் அடுத்த ஒரு வாரத்திற்குள் விடுதலை செய்யப்படவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுத்து உதவிய அமைச்சர் ராதாகிருஷ்ணனுக்கு நன்றி தெரிவித்த பெற்றோர் தொடர்ந்தும் தமது வாழ்க்கைக்கு பாதுகாப்பாக இருப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறும் வலியுறுத்தினர். (க)

தொப்பிகல....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெடுஞ்சாலை மீளத்திறக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வாக்காளர் பதிவேடுகளின் அடிப்படையிலேயே மக்கள் மீளக் குடியமர்த்தப்படவுள்ளனர். வாகரைப் பகுதியில் புலிகளால் கைவிடப்பட்ட முகாம் ஒன்றிலிருந்து பெருமளவு ஆயுதங்களை நாம் மீட்டுள்ளோம். அதில் 2 பெரிய ஆட்லறிப் பீரங்கிகளும் அடங்கும். கைவிடப்பட்ட இம்முகாமில் பெரும் எண்ணிக்கையான வாகனங்களைப் புலிகள் தீயிட்டுச் சென்றுள்ளனர். இவை அனைத்தும் எரிந்தநிலையிலேயே காணப் பட்டன - என்றார். (க-12)

CHEMISTRY CENTRE
Temple Rd. (Green park அருகே)
A/L 2009
GENERAL
Tue, Fri 3.30 - 4.30
THERMO
Wed. 3.30 - 4.30
அன்பழகன் B.Sc.

அன்பொளி கல்வி நிலையம்
சாவகச்சேரி
2006 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பாராட்டு நிகழ்வும் ஒன்று கூடலும்
காலம்: 27.01.2007 சனிக்கிழமை காலை 9 மணி
எமது கல்வி நிலையத்தில் கல்வி கற்றுச் சித்தியடைந்த மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இயக்குநர்.

Computer Courses
Start On :- 27.01.2007
மேலதிக விபரங்களுக்கு நேரில்
Softview Computer College
55, Arasady Road,
Jaffna. T.P: 021 2225170

திருமலையில் மிதிவெடிகள் மீட்பு

திருகோணமலை - சிறிமங்களபுரப் பகுதியில் நேற்று படையினரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது 111 மிதிவெடிகள் மீட்கப்பட்டன என்று தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்திருக்கிறது.

அத்துடன் திருகோணமலை - முகத்துவாரப் பகுதியில் விடுதலைப் புலிகளால் கைவிடப்பட்ட 'ரக்' வண்டியொன்று படையினரால் மீட்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு முஸ்லிம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் ரஷீட் எம். இம்தியாஸ் ஆகியோர் கலந்து கொண் டனர்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் சார்பில் அதன் அரசியல் துறைப் பொறுப் பாளர்களான வி. திலீபன், ஏ.பிரதீப், செய லாளர் திருமதி எஸ். பத்மினி, அரசியல் துறை உறுப்பினர் எஸ். குணாளன், சமாதான செயலகப் பொறுப்பாளர் எஸ். மகேஷ், பேச்சாளர் அஷாட் மௌலானா ஆகியோர் கலந்து கொண்டனர். இச்சந்திப்பு இரண்டு மணி நேரம் இடம்பெற்றது.

கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அதிபர் **வே.கு.ஜெகதீசன்** அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைவதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்களது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/சாந்தை சிற்றம்பலம் வித்தியாசாலை.
பண்டத்தரிப்பு.

(57467)

மரண அறிவித்தல்கள்

லடிஸ்லாஸ் டிலைக்ஷன்

மணற்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வன் லடிஸ்லாஸ் டிலைக்ஷன் 24.01.2007 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற லடிஸ்லாஸ் - பிறேமா (இத்தாலி) தம்பதியரின் மகனும் டலூசியன், சகிர்ஷன் ஆகியோரின் சகோதரனும் வென்சன்லாஸ், செபமாலையம்மா, காலஞ்சென்ற வேதநாயகம், றெஜீனா, ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25.01.2007) வியாழக்கிழமை மு.ப.10 மணிக்கு மணற்காட்டு புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(அ./51913)

தகவல்:
வெ.லடிஸ்லாஸ் (தந்தை).

குட்டியர் ஜெகதீசன் (சங்கானை)



(அதிபர், சிற்றம்பலம் வித்தியாலயம், சாந்தை)

விக்னேஸ்வரா வீதி, நிற்சாமம் சங்கானையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட குட்டியர் ஜெகதீசன் 24.01.2007 நேற்றுக் காலமானார்.

அன்னார் அமரர் குட்டியர் மற்றும் லட்சுமி தம்பதியரின் மகனும் லிங்கேஸ்வரியின் கணவரும் ஹரிகாசன் (சங்கானை சிவப்பிரகாச ம.வி), நிகாஷனா ஆகியோரின் தந்தையும் காலஞ்சென்ற மாணிக்கம் மற்றும் நாகம்மா தம்பதியரின் மருமகனும் திருஞானம், மகாதேவன், ஜெகநாதன் (அதிபர், அருணாசலம் வித்தியாலயம், அளவெட்டி), ரம்பதேவி, மோகனலீலா, பாக்கியநாதன் (ஜேர்மனி), லகாயினி, சந்திரவதனா (ஆசிரியை- சங்கானை சிவப்பிரகாச ம.வி), கிருபன் (சங்கானை சிவப்பிரகாச ம.வி.) ஆகியோரின் சகோதரரும் பொன்னுத்துரை (செயலாளர்-கி.அ.சங்கம்), வவி (சண்டிலிப்பாய்), பாஸ்கரன் (மனித உரிமைகள் ஆணைக்குழு, யாழ்ப்பாணம்), முருகவேல், இரத்தினசிங்கம், ராசலிங்கம் (சுவிஸ்), சிவலிங்கம் (சுவிஸ்), அன்னலிங்கம் (ஹொலண்ட்), தர்மலிங்கம் (கணக்காளர் பிரிவு, பிரதேச செயலகம், சங்கானை), அழகராசா (ஜேர்மனி), காந்தன் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2007) பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விக்னேஸ்வரா வீதி,
நிற்சாமம், சங்கானை.

தகவல்:
குடும்பத்தினர்.

தங்கஜெயமணிராசா செல்வம்

தென்புலோலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தங்கஜெயமணிராசா செல்வம் 22.01.2007 திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிட்டிணபிள்ளை - தங்கமுத்து தம்பதியரின் மகளும் சுப்பிரமணியம் - காலஞ்சென்ற தங்கம்மா தம்பதியரின் மருமகளும் தங்கஜெயமணிராசாவின் (முன்னாள் நில அளவையியலாளர், நில அளவைத் திணைக்களம்) மனைவியும் வேணி(லண்டன்), மஞ்சுளா (சமுர்த்தி முகாமையாளர், பிரதேச செயலகம், பருத்தித்துறை), சுதாகர் (லண்டன்), மேகலா (ஆசிரியை-வட இந்து மகளிர் கல்லூரி), சங்கர் (மாணவன், யாழ். உயர் தொழில்நுட்பக் கல்லூரி) ஆகியோரின் தாயும் தேவகிறிஸ்ணன் (லண்டன்), கணேஸ்வரன் (டிப்போ அத்தியட்சகர், பெற்றோலியக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை), தயாவதி (லண்டன்) ஆகியோரின் மாமியும் பிரவீன், ஜனகன், அனுஷன், பிரசாந் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25.01.2007) வியாழக்கிழமை காலை 8 மணிக்கு புலோலி தெற்கு சாரையடி இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு ஆனைவிழுந்தான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாரையடி,
புலோலி.

தகவல்:
சுதாகர் (மகன்).

குலசிங்கம் மகேஸ்வரி

43/3, கலட்டியைப் பிறப்பிடமாகவும் கல்லூரி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட குலசிங்கம் மகேஸ்வரி 24.01.2007 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - கனகம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற குலசிங்கத்தின் மனைவியும் காலஞ்சென்ற பொன்னையா மீனாச்சியின் மருமகளும் விக்கினேஸ்வரன் (கொழும்பு), விக்கினேஸ்வரி, விஜியுராணி (ஜேர்மனி), விஜியகுமார் (பிரான்ஸ்), விமலாதேவி (இந்தியா), விமலச்சந்திரன் (சுவிஸ்), விமலேஸ்வரன் (லண்டன்), விமலேஸ்வரி ஆகியோரின் தாயும் விஜியலட்சுமி (கொழும்பு), கிருஸ்ணானந்தன் (வேலணை), மகேந்திரன் (ஜேர்மனி), ரவீந்திரன் (இந்தியா சின்னன்ன), ஜமுனா (சுவிஸ்), சந்திரா (லண்டன்), செல்வகுமார் ஆகியோரின் மாமியும் லக்சன், ஜனனி, கஜனி, உமா, காயத்திரி, பிரகாஷ், துவாரகன், தேனுஷா, மயூரதர்ஷன், தினுகுமார் ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், குணசிங்கம், திருஞானசெல்வம், நாகேஸ்வரி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2007) பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

30/1, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

(57468)

தகவல்:
ச.செல்வகுமார்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.01.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.